<u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.</u>

<u>**அசல் வழக்கு எண். 143/2020**</u>

சாட்சி : PW– 1

பெயர் : திரு. G.பாபு தேதி : 24.09.2024

<u>**குறுக்குவிசாரணை**</u> :– (பிரதிவாதி தரப்பில்)

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை படித்துப் பார்த்தேன். பிரதிவாதி நான் பெற்ற கிரயம் செல்லாது என்று எதிர் கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அதற்கு நான் பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தாவா சொத்தை நான் கிரயம் பெறுவதற்கு முன் வில்லங்க சான்றிதழ் பார்த்தேன். அந்த சொத்தை வா.சா.ஆ.–8 மூலமாக குருமூர்த்தி என்பவர் ஏற்கனவே கிரயம் வாங்கியிருந்தார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.–9 மூலமாக குருமூர்த்தி என்பவரிடமிருந்து சிவலிங்கம் என்பவர் அந்த சொத்தை கிரயம் வாங்கியிருந்தார் என்றால் ஆமாம். வா.சா.ஆ–10 மூலமாக பிரதிவாதி அதை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.–5 மூலமாக தாவா சொத்துக்களையும் மற்ற சொத்துக்களையும் Dr.ஷம்ப்பு, சுரேந்திரன், மருத்துவர் சாந்தி கிரயம் வாங்கியுள்ளார்கள் என்றால் ஆமாம். அதில் சொத்தின் நீள அகலம் லிங்ஸ்–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் செக்குபந்தி கிழபுறம் நீலா சீனிவாசன் மற்றும் வண்டிதடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் தெற்குபுறம் சந்த்ரு பாத் துவா என்பவருடைய விவசாய நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வடபுறம் நடேசன் என்பவருடைய விவசாய நிலம். மேற்குபுறம் விற்பனை செய்தவருடைய மீதி காலி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் வடபுறம் 30 அடி தடம் உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம்.

வா.சா.ஆ.–1 கிரய பத்திரத்தில் அளவுகள் லிங்ஸ்–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அது சுமாராக 11 சென்ட் என்றும் அது எத்தனை சதுர அடி என்று குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். அதில் வடபுறம் செக்குபந்தியாக P.S. நடேசன் என்பவருடைய விவசாய நிலமும், 30 அடி கிழமேல் ரோடும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த 30 அடி ரோடு நடேசன் நிலத்திற்கு தென்புறம் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.–5 வடபுற செக்குபந்தி நடேசன் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ–5 கிரயம் பெற்ற பிறகு 30 அடி

ரோடு வடபுறத்தில் ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால் ஆமாம். வா.சா.ஆ–5 படி கிரயம் பெற்ற சொத்தில் 30 அடி ரோட்டிற்கு போய்விட்டது என்று சொன்னால் ஆமாம். வா.சா.ஆ–6 பிழை திருத்தல் பத்திரம் லிங்ஸ்–ல் உள்ள அளவுகளை சதுர அடியாக மாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.–6 சர்வே எண் தவறாக குறிப்பிட்டுள்ளதை சரி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.–2 நான் கிரயம் வாங்கிய சொத்து எனக்கு கிரயம் கொடுத்த சுரேந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.–2 கிரயம் பெறுவதற்கு முன் அந்த சொத்தின் மூலப்பத்திரங்களை நான் வாங்கி பார்த்தேன்.

வா.சா.ஆ.–5 கிரயம் பெற்ற பத்திரத்தை வாங்கி பார்த்தேன். வில்லங்க சான்றிதழ் பார்த்தேன். சாந்தி, தனஞ்செயன் பெயரில் உள்ள மூல பத்திரத்தை பார்த்தேன். அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.–5 கிரயம் கொடுத்த காலிஃப் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்தது போக மீதி நிலம் மேற்குபுறத்தில் இருந்தது என்றால் ஆமாம். வா.சா.ஆ.–1ல் சொத்துவிவரம் செக்குபந்தியில் மேற்குபுற எல்லை நகரமலை எல்லை வரை நீட்டிக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து ரோடு என்று கண்டுள்ளது என்றால் ஆமாம். எனக்கு கிரயம் கொடுத்த சுரேந்திரன் அவர் கிரயம் பெற்ற சாந்தி, தனஞ்செயன் என்பவருக்கு வா.சா.ஆ.–1 படி அந்த சொத்து பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.–8 கிரய பத்திரத்துடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட பகுதி தாவா சொத்து என்றால் ஆமாம். அதற்கு மேற்கில் ஒரு செல்வராஜ் என்பவருடைய நிலம் உள்ளது என்றால் ஆமாம். அதற்கு மேற்கில் 3 பிளாட் காலி நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதற்கு மேற்கில் நகரமலை போகும் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் ஆமாம். சுரேந்திரனின் மனைவி பெயர் Dr.பிரேமகுமாரி என்றால் ஆமாம்.

(வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./-A.M.Ravi
I Additional District Judge,
Salem.